கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.

முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி (FAC),
திருமங்கலம்.

2026ம் வருடம் மார்ச் மாதம் 07ம் தேதி சனிக்கிழமை
இடைநிலை மனு எண்.108/2023
இன்
அசல் வழக்கு எண்.537/2013
* * * *

1. வெங்கடேசன்
2. செல்வம்
3. கிருஷ்ணமூர்த்தி
4. முத்துகுமார்
5. விநாயக மூர்த்தி
6. சக்தி குமார்
7. பிரகாஷ்
8. விஜய்

... மனுதாரர்கள்/வாதிகள்

/ எதிர்/

1. வேல்ராஜா
2. அய்யாவு
3. மாவட்ட ஆட்சியர், மதுரை.
4. சர்பதிவாளர், திருப்பரங்குன்றம்.

... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இறுதியாக இம்மனுவானது 26.02.2026ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.பொன்னம்பலம் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில், 1ம் எதிர்மனுதாரருக்கு எதிர்மனுதாரரை ஆஜராகியும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளித்தும், மனு, எதிருரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

**உத்தரவு**

1.1) இம்மனுவானது 16.04.1969 மற்றும் 18.11.1998ம் ஆகிய தேதிகளில் எழுதிக்கொள்ளப்பட்ட பதிவில்லாத பாகவிஸ்தி பத்திரங்களை சட்டப்படி முறையாக பதிவு செய்வதற்கு ஏற்பட்ட காலதாதத்தை மன்னித்து அதற்கான முத்திரை கட்டணத்தை கணக்கீடு செய்து தெரிவிக்கும் பட்சத்தில் அதற்கான தண்ட தொகையை செலுத்துவதற்கு அனுமதி அளிக்க வேண்டி பிரிவு 151 cpc படி தாக்கல் செய்யப்பட்டு உள்ளது.

1.2) 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவினை எதிர்மனுதாரர் தரப்பு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று ஆட்சேபணை செய்து எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சனை என்னவென்றால், இம்மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதா? இல்லையா? என்தேயாகும்</u>**

இருதரப்பும் போதிய வாய்ப்பளித்தும், வழக்கு ஆவணங்கள் யாவும் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

2.1) மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு மனுவில், வழக்குச் சொத்து தொடர்பான 16.04.1969 மற்றும் 18.11.1998ம் ஆகிய தேதிகளில் எழுதிக்கொள்ளப்பட்ட பதிவில்லாத பாகவிஸ்தி பத்திரங்களை சட்டப்படி முறையாக பதிவு செய்வதற்கு ஏற்பட்ட காலதாதத்தை மன்னித்து அதற்கான முத்திரை கட்டணத்தை கணக்கீடு செய்து தெரிவிக்கும்பட்சத்தில் அதற்கான தாவா தொகையை செலுத்த அனுமதிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. மேலும், மேற்படி ஆவணங்களுக்கு முத்திரைக் கட்டணம் செலுத்தாமல் போனால் மனுதாரர்களின் உரிமைக்கும், உடைமைக்கும் பாதிப்பு ஏற்படக் கூடும்

என்றும் அதனால் இம்மனுவை அனுமதிக்க வேண்டியது அவசியமாய் உள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

2.2) மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள வழக்குச் சொத்து தொடர்பான 16.04.1969 மற்றும் 18.11.1998ம் ஆகிய தேதிகளில் எழுதிக்கொள்ளப்பட்ட பதிவில்லாத பாகவிஸ்தி பத்திரங்கள் இந்நீதிமன்றத்தில் 10.09.2013 மற்றும் 03.11.2017 ஆகிய தேதிகளில் தாக்கல் செய்யப்பட்ட போதும், கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மனுதாரர் தரப்பில் அதற்கான நடவடிக்கை எடுக்க முற்படவில்லை. மேலும், மேற்படி காலதாமதத்திற்கு மனுதாரர் தரப்பில் எவ்விதமான சட்டப்படியான காரணமும் கூறவில்லை. எனவே, அசல் வழக்கானது 2013 முதல் நிலுவையில் இருந்து வருவதை கருத்தில் கொண்டும், இம்மனு அசல் வழக்கை காலம் கடத்தும்விதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதத்தை கருத்தில் கொண்டும் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,** இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்பு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு 07.03.2026ம் தேதியன்று இந்த திறந்த நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN Digitally signed by ESWARAN MANIKANDAN Date: 2026.03.07 13:07:45 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.

1. **மனுதாரர் தரப்பு சாட்சி:–** இல்லை
2. **மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:–** இல்லை
3. **எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி:–** இல்லை
4. **எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:–** இல்லை

ESWARAN MANIKANDAN Digitally signed by ESWARAN MANIKANDAN Date: 2026.03.07 13:07:52 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.108/2023
இன்
அசல் வழக்கு எண்.537/2013
வரைவு/ செவ்வை உத்தரவு
நாள்: 07.03.2026